பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 12 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. ராஜஸ்தான் முக்கிய முதலீட்டு மையமாக உருவெடுத்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. எதிர்க்கட்சிகள் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.
3. மதுரை அருகே டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான உரிமத்தை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி தமிழக சடடப்பேரவையில் இன்று தனி தீர்மானம் கொண்டுவரப்பட்டது.
4. தெற்கு பசிபிக் தீவு நாடான டோங்கா நாட்டின் பிரதமர் திரு **Siaosi Sovaleni** தமது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.
5. ஆசியக் கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா – மலேசியாவை எதிர்கொள்கிறது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

ராஜஸ்தான் முக்கிய முதலீட்டு மையமாக உருவெடுத்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் உலக அளவிலான ராஜஸ்தான் முதலீட்டு மாநாட்டை அவர் இன்று தொடங்கி வைத்து பேசுகையில், இம்மாநிலத்தில் உள்ள திறன்மிக்க பணியாளர்களும், விரிவான சந்தையும் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரித்துள்ளதாக கூறினார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் அம்மாநில முதலமைச்சர் திரு பஜன்லால் ஷர்மா, மத்திய மற்றும் மாநில அமைச்சர்கள் பங்கேற்கேற்றுள்ளனா.

ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தகம் மற்றும் தொழில்துறை சார்ந்தவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

32 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இதில் பிரதிநிதிகளாக பங்கேற்றுள்ளனர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின் இன்று பிற்பகல் ஹரியானா செல்லும் திரு நரேந்திரமோடி, அங்கு பானிபட் நகரில் **Bima Sakhi Yojna** நிகழ்ச்சியை தொடங்கி வைக்கிறார்.

18 வயது முதல் 70 வயது வரை உள்ள மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெற்ற மகளிருக்கு இந்த திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர் திரு நரேந்திர மோடி **Karnal**–லில் உள்ள மகாரானா பிரதாப் தோட்டக் கலைப் பல்கலைக்கழக வளாகத்தில் இதற்கான அடிக்கலை நாட்டுகிறார்.

**[]<<<>>>[]**

தனியார் தொழில் நிறுவனத்துக்கு எதிரான லஞ்ச ஊழல் புகார் உள்ளிட்ட பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் இன்றும் எழுப்பியதால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதிக்கு வந்து லஞ்ச ஊழல் புகார் தொடர்பான குற்றச்சாட்டு குறித்து விவாதிக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

அவைத்தலைவர் திரு ஓம் பிர்லா கேள்வி நேரம் மிக முக்கியமானது என்றும், அதனை ஒத்தி வைத்துவிட்டு வேறு எந்த பிரச்சினையையும் எடுத்துக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

அவை நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்த ஒத்துழைப்புதருமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

இருப்பினும் தொடர் அமளி நீடித்ததால் மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்க்பபட்டு, பின்னர் இதே நிலை நீடித்தததால் பிற்பகல் இரண்டு மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.,

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதே பிரச்சினையை எழுப்பினர்.

அவர்கள் கொண்டு வந்த ஒத்தி வைப்பு தீர்மானத்தை அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் நிராகரித்தார்.

அவை நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்த ஒத்துழைப்பு தருமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

அவை முன்னவர் திரு ஜெ பி நட்டா, அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெற வேண்டுமென அரசு விரும்புவதாகக் கூறினார்.

எனவே கேள்வி நேரத்தை நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு தரவேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

தனிப்பட்ட காரணங்களை முன்னிலைப்படுத்தாமல் அவை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று அவர் தெரிவித்தார்.,

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூவும், அவை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் எதிர்கட்சிகள் நடந்துகொள்ளக் கூடாது என கேட்டுக் கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜூன கார்கே, மத்திய அரசு அவையில் தன்னிச்சையாக செயல்படுவதாகவும், அவை நடவடிக்கைகளை நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்துக்கு உகந்தது அல்ல என்றும் கூறினார்.

அவை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஒருமித்த கருத்து தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

அவையில் தொடர்ந்து அமளி நிலவியதால் திரு ஜக்தீப் தன்கர் அவையை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார். அதற்கு பின்னரும் நிலைமை சீரடையாததால் பிற்பகல் இரண்டு மணி வரை அவை ஒத்தி வைக்கப்படுவதாக அவர் கூறினார்

**[]<<<>>>[]**

வர்த்தகக் குழுமம் ஒன்றுக்கு எதிரான லஞ்ச ஊழல் புகார் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று காலை நாடாளுமன்றதிற்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.,

காங்கிரஸ், திமுக, ராஷ்ட்ரீய ஜனதாள் மற்றும் இடதுசாரி கட்சி உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்,

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மகக்ளவை எதிர்க்கடசி தலைவர் திரு ராகுல்காந்தி, திமுக-வின் திரு டி ஆர் பாலு, ஆர் ஜே டி உறுப்பினர் திரு மனோஜ் ஜா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

நாட்டு நலனுக்கு எதிரான செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியினரும் ஒன்றிணைந்து மத்திய அரசுடன் போராட முன்வர வேண்டுமென்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ வலியுறுத்தியுள்ளார்

புதுதில்லியில் இன்று யெ்தியாளர்களிடம் பேசிய அவர், சில முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அரசியல் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றாக செயல்பட வேண்டியது அவசியமாகிறது என்று கூறினார்.

ஜார்ஜ் **soros** அறக்கட்டளைக்கும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் ஒருவருக்கும் இடையே தொடர்பு இருப்பதை அண்மையில் வெளியான தகவல்கள் உறுதி செய்திருப்பதாகவும், நாட்டு நலனை கருத்தில் கொண்டு இதையும் எதிர்க்கட்சியினர் பரிசீலிக்க வேண்டுமென்றும் திரு கிரண் ரிஜிஜூ கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சோனியாகாந்தியின் 78-வது பிறந்த நாளையொட்டி பிரதமர் திரு நரேந்திரமோடி அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், திருமதி சோனியாகாந்தி நல்ல உடல் ஆரோக்கியத்துடன் நீண்டநாள் வாழ வேண்டுமென்று வாழ்த்துவதாகக் கூறியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மற்றும் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் உள்ளிட்டோரும் திருமதி சோனியாகாந்திக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

பேரவை தொடங்கியதும் மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் மதுரை அருகே நாயக்கர்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான உரிமத்தை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி தனி தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் இந்த தனி தீர்மானத்தை தாக்கல் செய்து பேசினார்.

பல்லுயிர் பெருக்க தலமாக விளங்கும் நாயக்கர்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இதுபோன்ற சுரங்கங்களை அமைக்கக்கூடாது என்று அவர் தெரிவித்தார்.

மாநில அரசின் அனுமதியின்றி இதுபோன்ற உரிமங்கள் வழங்குவதற்கு மத்திய அரசு அனுமதி அளிக்கக்கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த தனி தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பல்வேறு கட்சி உறுப்பினர்களும் பேசி வருகின்றனர்.

**[]<<<>>>[]**

ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவையின் நான்கு நாள் சிறப்பு கூட்டத்தொடர் தலைநகர் ராஞ்சியில் இன்று தொடங்கியது.

அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்ற புதிய உறுப்பினர்களுக்கு இடைக்கார அவைத்தலைவர் திரு ஸ்டீபன் மராண்டி பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

புதிய உறுப்பினர்கள் பதவியேற்ற பின், சட்டப்பேரவைக்கு புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

அதன் பின்னர் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அவை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.,

ஜார்க்கண்ட் ஆளுநர் திரு சந்தோஷ்குமார் கங்குவார் நாளை மறுநாள் பேரவையில் உரையாற்றவுள்ளார்.

அதனையடுத்து நடப்பு நிதி ஆண்டுக்கான இரண்டாவது துணை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளது.

**[]<<<>>>[]**

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் திரு ஆதவ் அர்ஜூனா ஆறுமாத காலத்திற்கு இடைநீக்கம் செய்யப்படுவதாக அக்கட்சியின் தலைவர் திரு தொல் திருமாவளவன் அறிவித்துள்ளார்.

கட்சி நலன்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அவர் செயல்பட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

48-வது சென்னை புத்தக கண்காட்சி நந்தனம் ஒய் எம் சி ஏ மைதானத்தில் இம்மாதம் 27-ஆம் தேதி தொடங்கி 17 நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்த புத்தக கண்காட்சி தொள்ளாயிரம் அரங்குகளுடன் விரிவான அளவில் நடத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் தலைவர் திரு சேது சொக்கலிங்கம் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - சேது சொக்கலிங்கம் ) ---56 செகண்ட்*

**[]<<<>>>[]**

தெற்கு பசிபிக் தீவு நாடான டோங்கா நாட்டின் பிரதமர் திரு **Siaosi Sovaleni** தமது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.,

இன்று அவர் மீது அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட உள்ளதை அடுத்து அவர் தமது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஆசியக் கோப்பை மகளிர் ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இன்று இந்தியா – மலேசியாவை எதிர்கொள்கிறது.

ஓமனில் இப்போட்டி இரவு மணி 8 - 30-க்கு தொடங்குகிறது.

இன்று நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் சீன தைபே – தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

உலக ஸ்குவாஷ் குழு சாம்பியன்ஷிப் போட்டியின் மகளிர் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா – கொலம்பியாவை இரண்டுக்கு-ஒன்று என்ற கோல் கணக்கில் வென்றது.

ஹாங்காங்கில் நடைபெறும் இன்றைய போட்டியில் இந்திய மகளிர் குழு – பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பிற்பகல் மூன்று மணிக்கு தொடங்குகிறது.